அக்கரைப்பற்று பிரதேச சபை
அம்பாரை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 யூன் 06 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்ளிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்டோபர் 19 ஆந் திகதி தவிசாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து அக்கரைப்பற்று பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடு

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் பொருள் கணக்கெடுப்புச் சபையின் பரிந்துரைக்கமைய அழிக்கப்பட்ட 125 புத்தகங்களின் கிரையப் பெறுமதி கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் | பிரதேச சபைகளின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் நிறைவான தீர்மானங்களை பெற்றுக்கொள்வதற்காக நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி, தொழில்நுட்பச் சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக்காக தனித்தனி குழுக்கள் நியமித்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 6,006 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 1,603,549 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 1,597,543 பின்னடைவைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் வருமான நிலுவைகள்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், அறவிடப்பட்ட வருமானம் மற்றும் வருமான நிலுவைகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரிகளும் வரிகளும் | 10,000 | - | - | - | - | - | - | - |
| (ii) வாடகை | 1,800,000 | 1,472,413 | 1,472,413 | - | 1,711,725 | 1,885,355 | 1,885,355 | - |
| (iii) உரிமைக் கட்டணம் | 274,000 | 374,000 | 374,000 | - | 182,000 | 313,150 | 313,150 | - |
| (iv) ஏனைய வருமானம் | 3,365,000 | 2,032,549 | 1,601,956 | 1,010,326 | 2,108,000 | 3,427,440 | 3,838,892 | 579,734 |

#### 2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றல்

2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்படவேண்டிய வருமானம் ரூபா 4,458,696 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 3,448,369 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 77% ஆக காணப்பட்டிருந்தது.

#### 2.2.3 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 368 வர்த்தக

நிலையங்கள் மற்றும் 4,673 வீடுகள் மீது 2010 ஆம் ஆண்டு தொடக்கம் வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 2,520,500 தொகையான வருமானம் இழக்கப்படுகின்றது.

2.2.4 நீதிமன்ற தண்டப்பணம்
-----------------------------------

2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நீதிமன்றத் தண்டப்பண நிலுவை ரூபா 993,701 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு
---------------------------------

3.1 முகாமைத்துவப் பலவீனங்கள்
-----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அலுவலகம், நூலகங்கள், பொதுச்சந்தை மற்றும் பொது விளையாட்டு மைதானம் என்பவை அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான 505 பேர்ச் அளவுடைய 07 காணிகளுக்கான உரிமைப் பத்திரங்கள் சபையினால் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையிலுள்ள வாகனங்களுக்குரிய வருமான உத்தரவுப் பத்திரங்களை 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு இறுதிவரை உரிய காலத்தில் பெறத்தவறியமையால் தண்டப்பணமாக ரூபா 15,920 தொகை செலுத்தப்பட்டுள்ளது.

(இ) சபைக்கு சொந்தமாக 14 வாகனங்கள் காணப்படுகின்ற போதிலும், அவ்வாகனங்களுக்காக 03 சாரதிகளே நியமிக்கப்பட்டுள்ளமையால், அவ்வாகனங்களை சபையின் செயற்பாடுகளுக்கு பயன்படுத்த முடியாதுள்ளது.

3.2 நூலக செயற்பாடுகள்
--------------------------------------

பிரதேச சபையினால் 2017 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்திற்கமைய பொதுநூலகங்களுக்கான புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 100,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 18,070 தொகை பெறுமதியான புத்தகங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், வாசகர்களின் தேவைகளிற்கேற்ப புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

3.3 ஒப்பந்த நிர்வாகம்
----------------------------

3.3.1 மர ஆலை வீதி புரனமைப்பு
----------------------------------------------

பிரதேச சபையினால் 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,501,668 தொகையில் மர ஆலை வீதிக்கு கொங்கிறீட் இட்டு புரனமைப்பு செய்யப்பட்ட போதிலும், 2018 மார்ச் 02 ஆம் திகதி வரை கொங்கிறீட் பாதையின் இருமருங்கிலும் 20.65 $m^3$ அளவுள்ள ரூபா18,998 பெறுமதியான கிறவல் இடப்படாது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3.3.2 வாய்க்கால் வீதிக்கு கொங்கிறீட் இடல்
---------------------------------------------------------------

பிரதேச சபையினால் 2016 ஆம் ஆண்டில் நெல்சிப் திட்டத்தின் கீழ் ரூபா 1,500,000 தொகை ஒதுக்கீட்டில் வாயக்கால் வீதிக்கு கொங்கிறீட் இடுவதற்காக சனசமூக நிலையம் ஒன்றுடன் சபை ரூபா 1,499,458 தொகைக்கு ஒப்பந்தம் செய்திருந்தது. இருப்பினும், பெறுகைக் கைந்நூல் 3.9.1 இற்கு முரணாக இவ் வீதி புனரமைப்பு வேலையானது சனசமூக நிலையத்தினால் பிரிதொரு நிறுவனத்திடம் உப ஒப்பந்தம் செய்யப்பட்டு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் நேரடியாக வீதியை பார்வையிட்ட போது

கொடுப்பனவு செய்யப்பட்ட வீதியின் அளவுடன் ஒப்பீடுகையில் உண்மையான அளவானது $2.48m^3$ இனால் குறைவாகக் காணப்பட்டதனால் ரூபா 37,992 தொகையானது ஒப்பந்தக்காரருக்கு மேலதிகமாகக் கொடுப்பபனவு செய்யப்பட்டிருந்தது. விபரம் வருமாறு.

| பட்டியல் இல | கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது | | | உண்மையாக காணப்பட்ட அளவின்படி | | | மேலதிக கொடுப்பனவு |
|---|---|---|---|---|---|---|---|
| | கணிய அளவு | விலை | மொத்தம் | கணிய அளவு | விலை | மொத்தம் | ரூபா |
| ------ | --------- | ------ | ----------- | ---------- | --------- | ------------ | ------------ |
| 04 | $84m^3$ | 14,070 | 1,181,880 | $81.52m^3$ | 14,070 | 1,146,986 | 34,894 |
| 05 | $53m^2$ | 690 | 24,150 | $30.5m^2$ | 690 | 21,052 | 3,098 |
| | | | | | | | **37,992** |

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் சபை நிதியில் இருந்து சபையின் இதுவரை காலமும் செப்பனிடப்படாத பாதைகள், வடிகான்கள் உரிய முறையில் அமைப்பதற்கும், மூன்று வாசிகசாலைகளையும் அபிவிருத்தி செய்யவும் தீர்மானிக்கப்பட்ட போதிலும், இவ்அபிவிருத்திக்காக சபை நிதியிலிருந்து ரூபா 70,717 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் பிரதேசத்தின் அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு பௌதீக மற்றும் சுகாதார சேவைகள் தொடர்பில் சபையினால் ஆக்கபூர்வமான திட்டமிடல் முன்மொழிவுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

4.2 தீர்த்து வைக்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டிலிருந்து அக்கரைப்பற்று பிரதேச சபை மாநகர சபை மற்றும் பிரதேச சபை என இரண்டு நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்ட போது உரிய அங்கீகாரமின்றி ரூபா 25,808,155 கூட்டு மொத்தமான சொத்துக்களும் ரூபா 2,398,775 கூட்டு மொத்தமான பொறுப்புக்களும் கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டன.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் பிரதேச சபைகளை வலுவூட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் ஆலிம்நகரின் உள்ளக வீதிகளை புனரமைப்பதற்கான ஒப்பந்தம் சனசமூக நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில், சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் எழுத்து மூலமான உறுதிப்படுத்தலின்படி குறித்த வேலைக்கு சபையின் மோட்டார் கிரேடர் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அம்மோட்டார் கிரேடர் முலம் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கான கொடுப்பனவாகிய ரூபா 42,000 தொகையையும் சபை சனசமூக நிலையத்திற்கே செலுத்தியிருந்தது.

(இ) சபையின் JCB இயந்திரம் மீளாய்வாண்டில் விபத்துக்குள்ளாகி ரூபா 115,128 செலவில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. இச்செலவில் காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 37,500 இழப்பீட்டுத் தொகை பெறப்பட்டிருந்தது. இருப்பினும், சபையினால் இவ்விபத்து தொடர்பில் அரச நிதிப்பிரமாணம் 103, 104(1) இன் பிரகாரம் பொலிஸ் முறைப்பாடு மற்றும் விசாரணை நடாத்தி நட்டத்தின் அளவையும் அந்நட்டத்திற்கு பொறுப்பானவர்களையும் நிர்ணயிப்பதற்கும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நீர் இணைப்பினை பெற்றுக்கொள்வது தொடர்பாக அக்கரைப்பற்று, நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கொடுப்பனவு மீது 11% பெறுமதிசேர் வரிக்குப் பதிலாக 15% பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்டுள்ளதால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 34,749 தொகை மேலதிகமாகச் செலுத்தியுள்ளது.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

--------------------------------------------------

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல்<br>ii. சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். |
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (இ) ஒப்பந்த நிர்வாகம் | i. ஒப்பந்தம் வழங்கும் போது உப ஒப்பந்தம் மேற்கொள்ளாத சனசமூக நிலையத்தினை கவனத்திற் கொள்ளல்.<br>ii. ஏற்றுக் கொள்ளத்தக்கதான காரணங்களிற்கு மாத்திரம் கால நீடிப்பு வழங்குதல். |
| (ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம் | திண்மக் கழிவுகளை தரப்படுத்தி சேகரித்தல் |